DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

MCOP. No. 150/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents –RW2

| | | |
|---|---|---|
| Name | : | **அபிராமி** |
| Father Name | : | சண்முகசுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், இராமநாதபுரம். |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

2ம் எதிர்மனுதார் தரப்பு முதல் விசாரணை:–

நான் இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையில் தேவிப்பட்டினம் காவல்நிலைய குற்ற எண்.27/2022 வழக்கில் சம்மந்தப்பட்ட TN 39CM 5837 என்ற வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் அறிக்கையையும் இராமநாதபுரம் மாவட்டம், வட்டம், புள்ளங்குடி கிராமத்தை சேர்ந்த கண்ணன் மகன் வினித் என்பவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டிருப்பின் அதன் நகலை தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை கொண்டு கணினியில் தேடியதில் ஓட்டுநர் வழங்கப்பட்டதற்கான விவரங்கள் ஏதும் இல்லை என வாட்டர போக்குவரத்து அலுவலர் எனக்கு அதிகாரம் அளித்து வழங்கிய கடிதத்தை

தாக்கல் செய்கிறேன். அந்த கடிதம் **சா.சா.ஆ.1**. TN 39CM 5837 என்ற வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2**.

<u>மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கியதன் அடிப்படையில்தான் நான் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் காவல் ஆய்வாளர் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் வாகன ஆய்வறிக்கையை தயார் செய்தார் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.